DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.
CC. No. 5 of 2018
Prosecution witness : LW -10 /PW-9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிமனோகரன் | Caste | : | |
| Fathers Name | : | அன்பரசன் | Calling | : | |
| Village | : | பட்டரைபொரும்புதூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 44 |

(Accused called absent. petition filed and allowed )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024 .

முதல் விசாரணை நேரம் 11.30

1. நான் தற்போது உணவுபொருள் வழங்கல் மற்றும் குற்ற தடுப்பு பிரிவில் ஆய்வளராக பணிபுரிந்து வருகின்றேன்.

2. கடந்த 2017ம் ஆண்டு ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணிபுரிந்தபோது 27.08.2017அன்று மதியம் தேவி க.பெ சலபதி அவர்கள் கொடுத்த புகாரிணை பெற்று அதன் தன்மை படி காவல் நிலைய குற்ற எண் 440/2017 இதச பிரிவு 392 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

3. புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் கணம் ஊத்துக்கோட்டை நீதிமன்றம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கையானது அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

5. இவ்வழக்கில் முதன்முதலில் புகார் அளிக்கும்போது எதிரிகள் பெயர் குறிபிட்டு புகார் அளித்தார்களா என்றால் இல்லை.

6. இவ்வழக்கில் புகார் அளிக்கும் போது எதிரிகள் வந்தாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் குறிபிட்டு எதெனும் புகார் அளித்தார்களா என்றால் இல்லை.

7. தொலைந்து போன நகை சுமார் 4 பவுன் என்று குறிபிட்டு புகார் அளித்துள்ளார்களா என்றால் சரிதான்.

8. வழக்கு சம்பவம் நடந்த நாளிலிருந்து ஒரு நாள் தாமதமாக தான் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். காலதாமத்திற்காக காரணம் எதெனும் குறிபிபட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டர் இருக்கும்.

10. புகார் அளிக்கும்போது புகார்தாராருடன் யாரேனும் வந்தார்களா என்றால் இல்லை.

11. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் மின்சாரம் இல்லை என்றும், அதனால் இவழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் பதிவு எண் பார்க்கமுடியவில்லை என்று கூறியுள்ளார் என்றால் சரிதான்.

12. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யாக காவல் அறிக்கை தாக்கல் செய்ததற்கு அவர்களுக்கு பவ்வியப்பட்டு நான் சாட்சியம அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 11.45